புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | செப்டம்பர் 07, 2017 | புரட்சி 16 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00

# அனிதாவின் மரணத்துக்கு நீதி கேட்டு கழகம் ஆர்ப்பாட்டம்; முற்றுகை

*அனிதாவின் மரணம் தமிழகத்தை கொதிப்படையச்செய்துள்ளது. 1200க்கு 1176 மதிப்பெண் பெற்றும் ‘நீட்’ தடையால் மருத்துவக் கல்லூரியில் நுழைய முடியாத நிலையில் செப்டம்பர் 1ஆம் தேதி சமூக நீதிக்காக உயிர்ப்பலி தந்தார். மத்திய மாநில அரசுகளின் படுகொலையாகியிருக்கிறது அவரது மரணம். தமிழகம் முழுதும் போராட்டக் களமாகி வருகிறது.*

*கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டம் முற்றுகைப் போராட்டங்களை நடத்தினர்.*

திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை மாவட்டம் சார்பாக. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவரும் மத்திய காவி அரசால் மருத்துவ படிப்பு கனவு சிதைந்து உயிர்பலி தந்தருவமான அனிதா அவர்களுக்கு நீதிக் கேட்டு, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி 2.09.2017 மாலை 3 மணி யளவில் பா.ஜ.க தலைமை அலுவலக முற்றுகைப் போராட்டம் இரா.உமாபதி (சென்னை மாவட்ட செயலாளர்) தலைமையில் நடைபெற்றது.

முற்றுகைப் போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டு மத்திய ஆட்சிகளுக்கு எதிராக வும், தமிழக மாணவர்களுக்கு இழைக்கப்படும் துரோக செயலை கண்டித்தும் போர் முழக்க மிட்டனர். தமிழக கல்வி உரிமைகளை மாநில பட்டியலில் இருந்து நீக்கி, பொதுப்பட்டியலுக்கு மாற்றி அமைக்கும் மோடி ஆட்சியை கண்டித்தும் மோடியின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு தியாகராய நகரில் அமைந்துள்ள முருகன் கல்யாண மண்டபத்தில் அடைக்கப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

அனிதா மரணத்துக்கு நீதி கேட்டும், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரியும், 04.09.2017 மாலை திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை மாவட்டத்தின் மயிலாப்பூர் பகுதி தோழர்கள் மற்றும் விசாலாட்சி தோட்ட பகுதி மக்கள் இணைந்து சென்மேரீஸ் பாலம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் கல்வி உரிமைகளை பறிக்கும் மத்திய அரசை கண்டித்து மோடியின் உருவ பொம்மையை எரித்து கண்டன முழக்கமிட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு மயிலாப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வைக்கப்பட்டு, பிறகு விடுதலை செய்யப் பட்டனர்.

**சேலத்தில்** – சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அனிதாவின் மரணத்திற்கு நீதி வழங்கிட கோரியும், ‘நீட்’ தேர்வை ரத்துசெய்ய வலியுறுத்தியும் சேலம் தலைமை தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் 02.09.2017 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் கருப்பூர் சக்திவேல் தலைமை தாங்கினார். சேலம் கிழக்கு மாவட்ட பொருளாளர் ஏற்காடு பெருமாள் முன்னிலை வகித்தார். தோழர் இரணியாவின் முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரி, மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, முல்லை வேந்தன், சேலம் மாநகர அமைப்பாளர் பாலு, தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல் கண்டன உரையாற்றினர். சேலம் மாநகர செயலாளர் பிரபு நன்றியுரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சேலம் மாநகரம், இளம்பிள்ளை, நங்கவள்ளி, ஏற்காடு, மேட்டூர், கொளத்தூர், ஆர்.எஸ் பகுதி பொறுப்பாளர்கள், தோழர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மாணவர்கள் என சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் கணிசமான அளவு அங்கேயே நின்றிருந்து ஆர்ப்பாட்டத்தை முழுமையாக கவனித்தனர். சேலம் மாநகர தலைவர் பரமேஸ் குமார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**ஈரோட்டில்** – அனிதாவின் மரணத்துக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம் ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 03.09.2017 அன்று மாலை 3 மணிக்கு ஈரோடு வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்றது.

அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமை தாங்கினார். மாணவி அனிதாவின் மரணத்திற்கு நீதி கேட்டும், மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வைரவேல் ஆர்ப்பாட்ட முழக்கமிட்டார்.

ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் வேணு கோபால், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், ஆசிரியர் சிவகாமி, சங்கீதா, இணையதளப் பொறுப்பாளர் விஜயக்குமார், அமைப்புச் செய லாளர் இரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தை முடித்துக் கொண்டு தோழர்கள் அனைவரும் ஊர்வலமாக சென்று ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள பெரியார் சிலை முன்பு கனல்மதி படிக்க ‘நீட்’ ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**திருப்பூரில்** – மாணவி அனிதாவின் மரணத் திற்கு காரணமான மத்திய பா.ஜ.க. மோடி அரசை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும் 02.09.2017 அன்று மாலை 5 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு திருப்பூர் மாவட்டகழகத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழக பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். த.வா.க. மத்திய மாவட்ட செயலாளர் சந்தோஷ் முன்னிலை வகித்தார். மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், இணைய தள பொறுப்பாளர் விஜய்குமார், அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், தனகோபால், சங்கீதா, மாதவன்அருண் (மக்கள் கட்சி), கௌதம், மாதவன், ராஜசிங்கம், ரவி, கனல் மதி, தேன்மொழி, பார்வதி, முத்து, கருணாநிதி, சங்கீதா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவையில்** – கோவையில் காந்தி பூங்காவில் நீட் எதிர்ப்பு மாணவர் கூட்டமைப்பு சார்பில் 02.09.2017 காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் பூர்ணிமா நந்தினி தலைமையில் சிறப்பாக நடந்தது. நிமிர்வு குழுவின் பறை முழக்கத்தோடு ஆரம்பமானது. நீட் தேர்வு விலக்கு பெறும்வரை தினமும் நடக்கும் இடம் அந்தந்த அமைப்பு தோழரிடம் அறிவிக்கப்படும் . அனுமதி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நடக்கும் என்ற முடிவோடு ஆர்ப்பாட்டம் முடிந்தது.

பொதுவாக வேடிக்கை பார்த்தவர்கள் கூட நிகழ்வு முடிவடையும் நேரத்தில் பங்கேற்பாளர்களாக இருந்தார்கள். தேன்மொழி அடுத்த கட்ட போராட்டத்தைப் பற்றி விளக்கிப் பேசினார். கண்மணி, வினோத், இளந்தமிழகம், கோவை மாநகர கழகத் தோழர்களும் உணர்வுப் பூர்வமாக பேசினர். கழகத் தோழர்கள் நேருதாஸ், நிர்மல் குமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

(படங்கள் 4ஆம் பக்கம்)

## அனிதாவுக்கு கழகத்தலைவர் கொளத்தூர் மணி இறுதி மரியாதை



குழுமூரில் அனிதாவின் உடலுக்கு கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, செப்டம்பர் 2ஆம் தேதி காலை மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார்.

தலையங்கம்

## ‘அனிதாவின் 1176’



தமிழ்நாட்டின் சமூக நீதி தத்துவம் வார்த்தெடுத்தப் பெண் அனிதா. ஒரு சுமை தூக்கும் தொழிலாளியின் ஏழை தலித் குடும்பத்தில் வறுமைச் சூழலில் தனக்கும் மருத்துவராகும் ஆற்றல் இருக்கிறது என்ற தன்னம்பிக்கையோடு இரவு பகலாக உழைத்து படித்துப் பெற்ற மதிப்பெண் 1200க்கு 1176.

‘நீட்’ தேர்வு என்பது இல்லாமலிருந்தால் மருத்துவக் கல்லூரியின் கதவுகள் அவருக்கு திறந்திருக்கும். உச்சநீதிமன்றம் வரை சென்று போராடிப் பார்த்தார். ஒரு கிராமத்தில் வறுமைச் சூழலில் ஜாதிய ஒடுக்குமுறை வலியோடு படித்தப் பெண்ணின் சாதனையை உச்சநீதிமன்றம் திரும்பிப் பார்க்க மறுத்துவிட்டது.

மருத்துவக் கல்வியின் திறனை உயர்த்துவதற்குத்தான் நீட் தேர்வு என்று வாதிடுவோரை சகித்துக் கொள்ளவே முடியவில்லை. சரியான விடைக்கு மதிப்பெண் என்பதுதான் நாம் பழகியிருக்கும் நேர்மையான கல்வித் திட்டம். ஆனால், தவறான விடைக்கு மதிப்பெண் குறைப்பு; தவறான விடையைத் தேர்ந்தெடுக்கும் மனநிலைக்கு மாணவர்களைக் குழப்பி விடும் சூழ்ச்சித் திறன் மிகுந்த வினாக்கள் என்று அறமேயற்ற ஒரு பயிற்சித் தேர்வு ‘நீட்’.

நாடாளுமன்றத்திலே ‘நீட்’ தேர்வு முறை காங்கிரஸ் ஆட்சியில் சட்டமாக்கப்பட்டபோது அதை ஆதரித்தவர்கள் இப்போது எதிர்க்கலாமா என்ற கேள்வி அர்த்தமற்றது. ‘நீட்’டை விரும்பாத மாநிலங்கள் அதை ஏற்க வேண்டாம் என்று தரப்பட்ட விதிவிலக்குகள் இருந்தன. மருத்துவத் துறைக்கான நாடாளுமன்றக் குழுவும் இதே கருத்தை பரிந்துரைத்ததையும் ஏன் இவர்கள் பார்க்க மறுக்கிறார்கள்?

தமிழ்நாட்டின் கல்விக் கொள்கையில் நடுவண் ஆட்சி ஏன் தலையிட வேண்டும்? இந்தியாவுக்கே வழி காட்டக் கூடிய தமிழகத்தின் மருத்துவ சேவைக் கட்டமைப்பையே இந்த ‘நீட்’ தேர்வு முறை குலைத்து விடுகிறது என்பதற்கு இவர்களிடம் என்ன பதில் இருக்கிறது?

பள்ளித் தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியாமல் அவமானம் தாங்காது ‘தற்கொலை’ செய்து கொள்ளும் செய்திகள் வந்த தமிழகத்தில் மிக உயர்ந்த மதிப்பெண் பெற்ற ஒரு மாணவியை ‘மரணமடையச்’ செய்திருக்கிறது பா.ஜ.க.வின் ‘நீட்’.

69 சதவீத இடஒதுக்கீடு அப்படியே நீடிக்கும்போது ஏன் எதிர்க்க வேண்டும் என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். 69 சதவீத ஒதுக்கீட்டின் ‘சமூக நீதி’ நோக்கம் இதில் புறந்தள்ளப் பட்டிருக்கிறதே! வெளி மாநிலத்துக்காரர்கள் தமிழக வாழ்விடச் சான்றிதழ்களை மோசடியாகப்பெற்று இடங்களைப் பறித்தது குறித்து ஏன் பேச மறுக்கிறார்கள்? தமிழகத்தின் 69 சதவீத இடஒதுக்கீட்டில் ‘கை வைக்கவில்லை’ என்று நியாயம் பேசுகிறவர்கள், மருத்துவ மேல் பட்டப் படிப்பு இடங்களிலே தமிழகத்துக்கான இடங்களில் 50 சதவீத இடங்களை நடுவண் ஆட்சி பறிப்பதை நியாயப்படுத்துவார்களா? உயர் சிறப்புப் பட்டப் பிரிவுக்கான 192 இடங்களையும் அகில இந்தியப் போட்டிக்கு திறந்து விட்டிருக்கிறார்களே! அதற்கு இவர்களிடம் என்ன விளக்கம் இருக்கிறது?

உலகத் தரத்துக்கு கல்வியை உயர்த்துவதற்குத்தான் ‘நீட்’ என்று வாதாடுகிறார்கள். இதே குரலைத் தான்1950ஆம் ஆண்டு ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ என்ற அன்றைய சமூக நீதிக் கொள்கைக்கு எதிராக வாதாடிய அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒலித்தார். அரசியல் சட்டத்தை உருவாக்கும் குழுவில் இடம் பெற்றிருந்த அல்லாடி கிருஷ்ணசாமி உயர்நீதிமன்றத்தில் பார்ப்பன உணர்வோடு ஒரு வழக்கறிஞராக வந்து வாதாடிய அவலத்தையும் அன்று சென்னை மாகாணம் பார்த்தது.

“சென்னை இராஜ்ய மக்கள் புதிய சகாப்தத்துக்கு ஏற்பத் தங்களை அமைத்துக் கொள்ளவேண்டுமே தவிர வகுப்புரிமை நீதி போன்ற பிற்போக்கான பிரச்னைகளில் தலையிட்டு வாதிடலாகாது” என்றார் அல்லாடி.

தனக்கு மருத்துவக் கல்லூரியில் ‘வகுப்புரிமை’ கொள்கையால் இடம் கிடைக்காமல் போய்விட்டது என்று அன்று வழக்குத் தொடர்ந்தவர் செண்பகம் துரைராசன் என்ற பார்ப்பனப் பெண். பட்டப் படிப்பை முடித்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு தனது 37ஆவது வயதில் “நீதி” கேட்டு வழக்கு வழக்கு மன்றம் வந்தவர். இன்னும் ஒரு வேடிக்கை – எந்த மருத்துவக் கல்லூரிக்கும் மனுப் போடாமலேயே வழக்குத் தொடுத்திருந்தார் என்ற உண்மை உச்சநீதிமன்றத்தில் அம்பலமான பிறகும் அவருக்கு ஒரு இடத்தை மருத்துவக் கல்லூரியில் ஒதுக்கி வைக்கவேண்டும் என்று அன்றைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதுதான்! அத்தனைத் தடைகளையும் தகர்த்து, தமிழ்நாடு கட்டமைத்த சமூகநீதிக் களத்தில் நிமிர்ந்து நின்றவர்தான் அனிதா!

மதிப்பெண் தான்தகுதிக்கான அளவுகோல் என்று அன்று கூப்பாடு போட்டவர்கள், அதே மதிப்பெண் தகுதியை எங்களாலும் பெற முடியும் என நிரூபித்த அனிதாவுக்கு நீதி வழங்க மறுத்து விட்டார்கள்.

கெஞ்சிப் பெறுவதல்ல நீதி என்ற முடிவுக்கு தமிழகம் வந்தாக வேண்டும். தமிழ்நாட்டுக்குரிய கொள்கை முடிவுகளை எடுக்கும் உரிமை தமிழக அரசுக்கு மட்டுமே உண்டு என்ற தன்னாட்சி உரிமை முழக்கம் உரத்து எழுப்பப்படவேண்டும்.

‘கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்று’ என்ற முழக்கத்தோடு ‘நீட்’ தேர்வை நிறுத்திக் காட்டுவோம். அதுவே அனிதாவின் மரணத்துக்குக் கிடைக்கும் நீதி!

# மாநிலத்திற்கென தனிக் கொடி: தமிழகமே முன்னோடி

தங்களுக்கென்று தனிக் கொடி வேண்டும் என்று கர்நாடகத்திலிருந்து குரல்கள் எழத் தொடங்கியிருக்கின்றன. பல்வேறு அமைப்பு களிடமிருந்து வந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து இதுதொடர்பாக ஒன்பது பேர் கொண்ட குழுவை அமைத்திருக்கிறார் முதல்வர் சித்தராமையா. இதுபோன்ற முயற்சி களுக்கும் தமிழகம் முன்னோடி என்று சொல்லவேண்டும்.

அரசியலமைப்பு அவையில் அன்றைக்கு உறுப்பினராக இருந்த ஜெயபால் சிங் முண்டா தேசியக் கொடியோடு பழங்குடிகளுக்குத் தனியாகக் கொடி வழங்க வேண்டும் என்று கோரினார். அவர் முன்வைத்த கோரிக்கை விவாத அளவிலேயே முடிவடைந்துவிட்டது.

1947 ஜூன் 22இல் பிரதமர் நேரு இந்திய தேசியக் கொடியை அரசியலமைப்பு அவையில் முதன்முதலாக அர்ப்பணித்தார். இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் காஷ்மீர் இந்தியாவோடு இணைந்தபோது காஷ்மீருக்கு அரசியல் சாசனப் பிரிவு 370இன் படி சிறப்பு அதிகாரங்களும், சலுகைகளும் வழங்கப் பட்டன. அத்தோடு, விவசாயிகளின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் கலப்பை படத்தோடு கூடிய தனிக் கொடியும் காஷ்மீருக்கு அனுமதிக்கப்பட்டது.

திராவிட நாடு கேட்டுப் போராடிய திமுக, பிற்காலத்தில் மாநில சுயாட்சியை வலியுறுத்தி யது. அண்ணா மறைவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த கலைஞர் கருணாநிதி இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு குழுவை அமைத்தார். நீதிபதி பி.வி.இராஜமன்னார் தலைமையிலான அந்தக் குழுவில் சந்திரா ரெட்டி, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இலட்சுமண சாமி முதலியார் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலையில், அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இருப்பதைப் போன்று ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனிக் கொடி வேண்டும் என்று வலியுறுத்தினார் கலைஞர் கருணாநிதி.

1970 ஆகஸ்ட் 20இல் இதுகுறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா காந்தி பதில் அளித்தார். அமெரிக்கா போன்ற நாடுகளில் மாநிலங்களுக்குத் தனிக் கொடி இருப்பதை அவரும் சுட்டிக்காட்டினார். மாநில முதல்வர்களிடம் இதுகுறித்து கலந்தாலோசிக்கப்போவதாகவும் கூறினார். ஆனால், மாநிலங்களுக்குத் தனிக் கொடி அவசியமில்லை என்று ஸ்தாபன காங்கிரஸும், இன்றைய பாஜகவான ஜன சங்கமும் எதிர்த்தன. “கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் மாநிலம் என்றால், அரிவாள், சுத்தியல், நட்சத்திர சின்னங்கள் அடங்கிய சீன, ரஷ்யக் கொடிகளை இங்கு கொண்டு வந்து விடுவார்கள்” என்பது அவர்களின் வாதம்.

இந்நிலையில், 1970 ஆகஸ்ட் 27இல் டெல்லியில் பத்திரிகையாளர்கள் முன்னிலை யில், தமிழக அரசின் கொடி எப்படி இருக்கும் என்று, தான் வடிவமைத்த படத்தைக் கலைஞர் கருணாநிதி வெளியிட்டார். அந்தப் படத்தில், மேல் பக்கம் தேசியக் கொடியும், கீழ்ப் பகுதியின் வலது பக்கத்தில், தமிழகத்தின் இலச்சினையான கோபுர முத்திரையும் இடம்பெற்றிருந்தன. இப்பிரச்சினையில் தீர்வு எதுவும் எட்டப்படாத நிலையில், சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையை அந்தந்த மாநில முதல்வர்களுக்கு வழங்க வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தினார். இந்தக் கோரிக்கையை இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டார்.

இப்படி கலைஞர் - தமிழகம் வழியாக முதல்வர்கள் பெற்றதே தேசியக் கொடி யேற்றும் உரிமை. கர்நாடகத்தின் கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டியது. அது ஏற்கப்பட்டு மாநிலங்களுக்கு தனிக்கொடி கிடைத்தால், அந்த வரலாற்றிலும் தமிழகமே முன்னோடியாக இருக்கும்.

# இந்தி பேசும் மாநிலத்தில் இந்தி வழி பொறியியல் படிப்பு ரத்து!

வடமாநிலங்கள் முழுவதுமே இந்தி பேசினால் பிழைத்துக்கொள்ளலாம் என நெடுங்காலமாகக் கூறப்பட்டு வரும் நிலையில், இந்தி மாநிலம் எனப்படும் மத்தியப்பிரதேசத்தின் தலைநகரில், இந்தியின் மூலம் பொறியியல் பட்டம் படிக்க ஒருவருமே முன்வரவில்லை என்பது வியப்பில் ஆழ்த்துகிறது.

மத்தியப்பிரதேச மாநிலம், போபாலில் ‘அடல்பிகாரி வாஜ்பாயி இந்தி பல்கலைக்கழகம்’ செயல்படுகிறது. இங்கு கடந்த ஆண்டு முதல் இந்தி மூலம் பொறியியல் பட்டப்படிப்புகள் கற்பித்தல் தொடங்கப்பட்டது. மூன்று பொறியியல் பிரிவுகளில் மொத்தம் **180** பட்டப்படிப்புகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டில் இங்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை மொத்தமே நான்கு பேர் மட்டும்தான். முதல் ஆண்டில்தான் அப்படி என்றால், இந்த ஆண்டில் அதுவும் இல்லை !

பொறியியலில் டிப்ளமோ படிப்பு முடித்த **11** பேர் மட்டும், நேரடியாக பி.இ. இரண்டாம் ஆண்டில் சேர்ந்துள்ளனர். ஆனால் பி.இ. முதலாம் ஆண்டில் ஒருவர்கூட சேரவில்லை. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்தது, பல்கலைக்கழக நிர்வாகம்.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் தற்போதைக்கு நான்கு தற்காலிகப் பேராசிரியர்கள் தான் இருக்கின்றனர். ஒரு முழுநேரப் பேராசிரியர்கூட இன்னும் பணியமர்த்தப்படவில்லை. இன்னும் பல உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அடல் பிகார் வாஜ்பாயி பல்கலைக்கழகமானது தன்னாட்சி அந்தஸ்து உடையது என்பதால், அதன் நிர்வாகமே இதில் முடிவுசெய்யலாம் என்று மத்தியப் பிரதேச அரசு கூறிவிட்டது. மாநிலத்தின் தொழில் கல்வித் துறை அமைச்சர் தீபக் ஜோசி, பகிரங்கமாக இதைத் தெளிவுபடுத்திவிட்டார்.

விரைவில் நடக்கவுள்ள பல்கலைக்கழகத்தின் கல்விக்குழுக் கூட்டத்தில், பொறியியல் படிப்புகள் குறித்து முடிவெடுக்கும் என்று அண்மையில் பொறுப்பேற்றுள்ள புதிய துணைவேந்தர் ராம்தேவ் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

# ஏது மெரிட்?

வீட்டில் தனி அறை இல்லை!

குளிர்சாதன வசதி, மின் விசிறி இல்லை!

கைபேசி இல்லை!

பத்து நாள் அலுவலகத்துக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு மகளுடன் கூடவே இருந்து சொல்லித் தரும் தகுதியும் வசதியும் பெற்ற அம்மா அப்பா இல்லை!

கண்விழித்துப் படிக்கும்போது

பக்கத்தில் பிளாஸ்க் காபி இல்லை!

‘அந்தக் காலத்துல நாங்க கவர்ன்மெண்டு சர்வீஸ்ல இருக்கும் போது யூ நோ’ என்று சொல்லும் தாத்தா இல்லை!

அமெரிக்காவில் ஐடியில் டாலர் சம்பளம் வாங்கி ஆண்டுக்கொரு முறை வீட்டுக்கு வரும் ரே-பான் கண்ணாடி மாமா இல்லை!

ஒரு மணி நேரத்துக்கு 500, 1,000 வாங்கும் டியூஷன் டீச்சர் இல்லை!

வார இறுதி சினிமா, ஹோட்டல் இல்லை!

விடுமுறைக்குச் செல்ல ஊர் இல்லை!

இருந்தாலும் 1176!

இதுதாண்டா மெரிட்டு!

**– விஜயசங்கர் ராமச்சந்திரன், முகநூலிலிருந்து**

# கைதான தோழர்களிடம் விடுதலை இராசேந்திரன் உரை

# புத்தரின் பார்ப்பனிய எதிர்ப்புப் புரட்சி

***புத்தர் விழா கொண்டாடி, அதில் விநாயகன் சிலைகளை பெரியார் உடைக்கச் சொன்னார் என்ற வரலாற்றை விடுதலை இராசேந்திரன் சுட்டிக் காட்டினார்.***

ஆக. 31 மாலை 4 மணியளவில் விநாயகன் சிலை ஊர்வலங்களை நிறுத்தக் கோரி பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தி கைது செய்யப்பட்டு திருவல்லிக்கேணி சமூக நலக் கூடத்தில் கழகத்தினர் வைக்கப்பட்டிருந்தனர். அப்போது தோழர் களிடையே பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார். அவரது உரை:

விநாயகன் சதுர்த்தி பக்தர்கள் கொண்டாடும் மதப் பண்டிகை. அது நடந்து முடிந்து விட்டது. அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்து மதப் பண்டிகைகளை கொண்டாடாதீர் என்று பரப்புரை செய்கிறோம். கொண்டாடுவோரை எதிர்த்துப் போராடுவது இல்லை. இன்று நடப்பது மதத்தை அரசியலாக்கும் ஊர்வலம். சமூக நல்லிணக்கத்தை குலைக்கும் அரசியல் ஊர்வலம், மதச் சார்பின்மைக்கு எதிராக நாட்டை இந்துக்களின் நாடு என்று கூறி சிறுபான்மை மக்களையும், மதச்சார்பின்மை யாளர்களையும் மிரட்டிப் பார்க்கும் ஊர்வலம். எனவேதான் நாம் பெரியார் கைத்தடிகளை ஏந்தி வீதிக்கு வந்து போராடினோம். கடந்த 15 ஆண்டுகளாக இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை நாம் நடத்துகிறோம். இந்த ஆண்டு மதத்தை அரசியலாக்காதே என்ற முழக்கத்தோடு, மக்கள் வாழ்வுரிமைகளை பறித்தவர்கள் நடத்தும் விநாயகன் சிலை ஊர்வலங்களை புறக்கணியுங்கள் என்று ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வேண்டுகோள் முழக்கத்தையும் இணைத்திருக்கிறோம்.

நீட் தேர்வு திணிப்பு, இந்தி திணிப்பு, சமஸ்கிருத திணிப்பு, ஜி.எஸ்.டி. வரி திணிப்பு, விவசாயிகளுக்கு இழைக்கும் துரோகம் என்று நடுவண் பா.ஜ.க. ஆட்சி, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைப் பறித்து வருகிறது.இந்த உரிமை பறிப்புக்கு ஆதரவாக 'வெண் சாமரம்' வீசிக் கொண்டு பா.ஜ.க.வின் ஊதுகுழலாக நிற்கும் இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி போன்ற அமைப்புகள்தான் இந்த விநாயகன் சிலை ஊர்வலங்களை ஒருங்கிணைத்து வருகின்றன. மோடி ஆட்சியின் திட்டங்களால் பாதிக்கப்படுகிற மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள். பா.ஜ.க. சங் பார்வையில் இவர்களும் 'இந்துக்கள்'தான். இந்துக்களின் வாழ் வுரிமைகளை பார்ப்பன மேல்வர்க்க நலன்களுக்காக பறித்துவிட்டு சிலை தூக்குவதற்கு மட்டும் ஒடுக்கப் பட்ட 'இந்து'க்களை பயன்படுத்துவது ஏன் என்று கேட்கிறோம். அதுதான் இந்தப் போராட்டத்திற்கு நாம் கூடுதலாக முன் வைத்துள்ள முழக்கம்.

பெரியார் 1953ஆம் ஆண்டு நடத்திய விநாயகன் சிலை உடைப்புப் போராட்டம் வர்ணாஸ்ரம எதிர்ப்புக்கான போராட்டம்தான். 1952இல் தமிழ்நாட்டில் தேர்தலில் போட்டியிட்டு மக்களை சந்திக்காமல் கொல்லைப்புற வழியாக பார்ப்பனர் இராஜகோபாலாச்சாரி முதல்வரானார். பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவி வர்ணாஸ்ரமத்தை காப்பாற்ற வும் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வாய்ப்புகளைப் பறிப்பதிலும் தீவிரம் காட்டினார். இன்றுமோடி ஆட்சி அமுல்படுத்திவரும் 'வர்ணாஸ்ரம' கொள்கைகள் தான் அன்றைக்கு இராஜகோபாலாச்சாரியின் திட்டங்களாகவும் இருந்தன என்று கூறலாம்.

பெரியார் வெகுண்டெழுந்து போராடினார். அந்த வரலாற்றுப் பின்னணியில் பெரியார் நடத்திய போராட்டங்களில் ஒன்றுதான் விநாயகன் சிலை உடைப்பு கிளர்ச்சி. "வர்ணாஸ்ரம முறையை ஜனநாயகத்தின் பெயரால் நிலைநாட்ட முனைகிறார் ஆச்சாரியார். இதோ, கடைசிச் சிகிச்சையாக கணபதி உருவ பொம்மையை 27.5.1953 அன்று மாலை 6.30 மணிக்கு தூள்தூளாக்கி மண்ணோடு மண்ணாய் கலக்கி விடுங்கள்" என்று அறிவித்தார் பெரியார். விநாயகன் எதிர்ப்புக்கு குறியீடாக பெரியார் புத்தரை முன் வைத்தார். "புத்தர் விழாவைக் கொண்டாடி பிள்ளையாரை விழாவில் உடையுங்கள்" என்றார். "கோயில்களில் இருக்கும் விநாயகர் சிலைகளை தூக்கி வந்து பெரியார் உடைக்கச் சொல்லவில்லை; கடைகளில் விநாயகன் பொம்மைகளை காசு கொடுத்து வாங்கி உடையுங்கள்" என்றார். "அரசு தடை போட்டால் தடையை மீற வேண்டாம். வீடுகளில், கடைகளில்,சொந்த இடங்களில் உடைத்து மண்ணில் கலந்து விடுங்கள்" என்றார். இப்போது இந்து முன்னணியினர் இரசாயன விநாயகன் சிலைகளை கடலில் கரைக்கச் சொல் கிறார்கள். நீர் நிலைகளை மாசுபடுத்துகிறார்கள். ஆனால் விநாயகன் சிலையை உடைக்கச் சொன்ன பெரியார், மண் பொம்மைகளை உடைத்து தூளாக்கி மண்ணோடு மண்ணாகக் கலக்கி விடுங்கள் என்று கூறியிருக்கிறார். திருச்சியில் பெரியாரே சிலையை உடைத்தார். பார்ப்பனர்களும், பார்ப்பனியத்துக்கு பலியான 'சூத்திரர்களும்' இதற்கு எதிர்ப்பாக பெரியார் உருவப்படத்தை எரிக்கிறார்கள் என்று செய்திகள் வந்தன. அப்போது பெரியார், "எரிப்பதற்கு என்னுடைய படத்தையும் அதற்கான செலவுத் தொகையையும் நானே தருகிறேன்" என்று 'விடுதலை' நாளேட்டில் அறிவித்தார். எதிரிகளின் எதிர்ப்பு வழியாகவே தனது கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்றவர் பெரியார்.

1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் இராமன், விநாயகன், கிருஷ்ணன் ஆபாச பிறப்புகளை ஓவியங்களாக எடுத்துச் சென்றபோது சிலர் ஊர்வலத்தினர் மீது செருப்பு வீச, அதே செருப்பை பெரியார் தொண்டர்கள் எடுத்து, இராமன், விநாயகன், கிருஷ்ணன் மீது அடித்தார்கள். அதற்காக பெரியார் படத்தை சில ஊர்களில் எதிர்ப்பாளர்கள் எரித்தார்கள். செருப்பால் அடித்து போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் பெரியார், "நானே எனது படத்தையும் செருப்பையும் பாதி விலைக்கு தருகிறேன். நன்றாக அடியுங்கள். உங்கள் எதிர்ப்பு வழியாகவே எனதுகொள்கைகள் பரவும்" என்று அறிக்கை விடுத்தார்.

**குழந்தைகளுக்கு சித்தார்த்தன், புத்தன், கவுதமன், அசோகன், கவுதமி இப்படிப்பட்ட பெயர்களைத் தான் பெரியார் ஏராளமாக சூட்டியிருக்கிறார்.**

விநாயகன் சிலை உடைப்புப் போராட்டத்தை புத்தர் விழாவோடு பெரியார் ஏன், இணைத்தார் என்பதை நாம் கருதிப் பார்க்கவேண்டும். புத்த மார்க்கத்தில் மிகவும் போற்றப்படுவது அரச மரம். அந்த மரத்தின் கீழ் தான் புத்தருக்கு அறிவு ஒளி கிடைத்தது என்று ஒரு கதையும் உண்டு. எனவே அரசமரத்தடிகளில் புத்தர் சிலைகள் வைக்கப்பட் டிருந்தன. புத்தமதத்தை வன்முறை ஊடுருவல் சூழ்ச்சி முறைகளில் ஒழித்த பார்ப்பனர்கள், மரத்தின் கீழே அப்போது வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலைகளை அழித்து, அங்கே விநாயகன் சிலைகளை வைத்தார்கள் என்றும் ஆய்வுகள் உண்டு.

நாம் சென்னையில் நடத்திய மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டத்தில்கூட இதுபற்றி விவாதித்தோம். அடுத்த ஆண்டு புத்தர் விழாக்களை அதாவது அம்பேத்கர் - பெரியார் - புத்தரைப் பார்த்த அதே கண்ணோட்டத்தில் புத்தர் விழாக்களை நடத்தி, புத்த மார்க்கத்தை பார்ப்பனர் வீழ்த்திய வரலாறுகளை விளக்கி, அதற்குப் பிறகு விநாயகன் சிலை ஊர்வல எதிர்ப்பை நடத்தலாம் என்று கூட பேசினோம். அதேபோல் புத்த மார்க்கம் தழுவிய புரட்சியாளர் அம்பேத்கர், எடுத்த 22 உறுதிமொழி களில் இராமன், கிருட்டிணன், விநாயகன் ஊர்வலங்களை வணங்க மாட்டேன் என்பதும் அடக்கம். அந்தக் கருத்துகளை துண்டறிக்கைகளாக அச்சிட்டு ஒடுக்கப்பட்ட மக்களிடம் வழங்கும் இயக்கத்தையும் நடத்துவது குறித்தும் விவாதித்தோம்.

பெரியார், புத்தரை மிகவும் மதித்த தலைவர், புத்தரின் விழாக்களில் பங்கேற்றுப் பேசியிருக்கிறார். வரலாற்றில் வர்ணாஸ்ரமத்துக்கு எதிராக மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர் புத்தர்தான்.

புத்தர் இயக்கம் முன் வைத்த மூன்று முழக்கங்களை பெரியார் விரும்பி ஏற்று, அதையே தனதுஇயக்கத்துக்கான முழக்கமாகவும் ஆதரித்துப் பேசினார். 'புத்தம் சரணம்கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி' - இதுதான் புத்தர் முன் வைத்த முழக்கம்.

"அறிவைப் (புத்தம்) போற்றுவோம்;
சமநீதி தத்துவத்தைப் (தம்மம்) போற்றுவோம்;
இயக்கத்தைப் (சங்கம்) போற்றுவோம்"

- என்பதே இந்த முழக்கங்கள் முன் வைத்த கருத்து.

"பிராமணனைப் போற்று; அவன் கூறும் கடவுளுக்கு பயந்து அதற்கான கடமைகளை மேல் உலகம் போவதற்கான வேத சடங்குமுறைகளை பின்பற்று" என்று வேதகாலப் பார்ப்பனியம் மக்களை சுரண்டிய காலத்தில் புத்தர் இந்த புரட்சி முழக்கங்களை முன் வைத்ததை நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அந்தக் காலத்தில் இது புரட்சியின் குரல்தான்!

புத்தர் செய்த ஒரே தவறு - பார்ப்பனர்களை அவர்களும் 'தம்மத்தை' ஏற்பதாகக் கூறியதை ஏற்று மனித நேயத்தோடு தனது இயக்கத்தில் சேர்த்ததுதான். பார்ப்பன ஊடுருவலே புத்த மார்க்கத்தின் கொள்கைகளை சிதைத்தது. எந்த மண்ணில் புத்த மார்க்கம் வேர் விட்டதோ, அந்த மண்ணிலே துடைத் தெறிந்து அழித்தது. இந்த வரலாற்றுப் படிப்பினை தான் பெரியாரை விழிக்கச் செய்தது. திராவிடர் கழகத்தில் பார்ப்பனர்களுக்கு இடமில்லை; கொள்கையை ஏற்பவர்கள் இருந்தால் வெளியி லிருந்து தாராளமாக ஆதரிக்கலாம் என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார். அத்தகைய ஊடுருவல் புத்த மார்க்கத்தில் நிகழ்ந்ததுபோல் நடந்து விடக் கூடாது என்பதற்குத்தான், 'திராவிடர்' என்ற குறியீட்டுச் சொல்லை இயக்கத்தின் அடையாள மாக்கினார். "கடவுள் இல்லை இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்ற சமரசமற்ற முழக்கங்களை தனது சிலைகளுக்கு கீழேயும் கல்வெட்டுகளாகவும் பெரியார் பதியச் சொன்னார் என்பதைப் பார்க்கும்போது, புத்த மார்க்கத்துக்கு நேர்ந்த விபத்து, திரிபுவாதங்கள் எதிர்காலங்களில் தனது கொள்கைகளுக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்ற கருதிதான் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

குழந்தைகளுக்கு பெரியார் சூட்டிய பெயர்களைப் பார்த்தாலே தெரியும். சித்தார்த்தன், புத்தன், கவுதமன், அசோகன், கவுதமி இப்படிப்பட்ட பெயர்களைத் தான் ஏராளமாக சூட்டியிருக்கிறார். புத்த மார்க்கம் பெரியாரை எப்படி ஈர்த்திருந்தது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகளாக நாம் கருதலாம்.

கி.மு.563இல் கபிலவஸ்துவில் பிறந்த சித்தார்த்தரின் தந்தை சுத்தோதனர், அப்பகுதியின் அரசர் என்றாலும் மனுதர்ம விதிப்படி ஆட்சி செய்யும் சத்திரியர் குலம் அல்ல என்றும், அவர் ஆட்சி செய்த பகுதி முடியரசாகவோ அல்லது குடியரசாகவோ நடக்கவில்லை என்றும் சுழற்சி முறையில் ஆட்சி அதிகாரம் நடந்தது என்றும் அம்பேத்கரும் தேவி பிரசாத் சட்டோபாத்யா போன்ற இந்திய தத்துவ ஆய்வாளர்களும் கூறுகிறார்கள். புத்தர் பிறந்த இனக்குழுவான சாக்கியர் குலம் சத்திரியர் வம்சம் அல்ல என்கிறார்கள்.

அப்போது இந்தியா என்ற நாடு இல்லை. இப்போதுள்ள வடநாடு தென்னாட்டுப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் நாகர்கள். அவர்கள்தான் திராவிடர்கள். இந்தியா முழுதும் பேசப்பட்ட மொழி தமிழ் என்கிறார் புரட்சியாளர் அம்பேத்கர். தென் பகுதியில் நாகர்கள் சமஸ்கிருதத்தை ஏற்க மறுத்ததால் திராவிடர்கள் என்ற அடையாளத்தை தக்க வைத்துக் கொண்டனர் என்றும் அம்பேத்கர் கூறுகிறார். புத்தர் பிறந்த சாக்கியர் குலம், நாகர்கள் மரபு வழிப்பட்டவர்கள். அவர்கள் பேசிய பாலி மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சாக்கியர்கள், "பிராமணர்களை வணங்குவதோ, மதிப்பதோ இல்லை. தானம் கொடுப்பதும் இல்லை" என்று கடும் சினத்துடன் அம்பக்தன் என்ற 'பிராமணன்' புத்தரிடம் கேட்டதாகவும் புத்தரின் சாக்கியர் குலம் இழிவானது என்று கூறியதாகவும் பவுத்த கருத்துகளின் தொகுப்பான 'திரிபிடகம்' கூறுகிறது. புத்தரின் சாக்கிய குலம் வர்ணாஸ்ரம தர்மப்படி பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்த்து வந்திருக்கிறது என்ற முடிவுவக்கு வர முடிகிறது. திராவிட சாக்கிய மரபில் பிறந்த புத்தர், ஒரு 'சூத்திரர்' என்று வரலாற்றாளர்கள் கூறுகிறார்கள்.

புத்தர் அறிவைத் தேடி புறப்பட்டபோது அவருக்கு வயது 29. அவர் துறவுக்குக் காரணமாக சொல்லப்படும் கதையை அம்பேத்கர் மறுக்கிறார். ஒரு நோயாளி, ஒரு முதியவர், ஒரு பிணம். இதைப் பார்த்து கவலைப்பட்ட புத்தர் துன்பங்களிலிருந்து விடுதலை பெற அறிவைத் தேடும் முயற்சியாக துறவியாக முடிவு செய்தார் என்ற கதை அறிவுக்குப் பொருந்தக் கூடியதாக இல்லை. 29 வயது வரை இத்தகைய துன்பத்துக்கு உள்ளாகும் மனிதர்களை புத்தர் சந்திக்காமலேயே இருந்திருப்பாரா? அப்படி இருந்திருக்க முடியாது. புத்தரின் துறவுக்கு வரலாற்று ரீதியான காரணத்தை அம்பேத்கர் விளக்குகிறார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# விநாயகர் ஊர்வலத்தைத் எதிர்த்து பெரியார் கைத்தடி ஆர்ப்பாட்டம்: கைது!

"மதத்தை அரசியலாக்காதே; சுற்றுச் சூழலை சீரழிக்காதே; மக்கள் உரிமைகளை மறுக்கும் பா.ஜ.க.வின் பரிவாரங்கள் நடத்தும் விநாயகன் சிலை ஊர்வலங்களை புறக்கணிப்பீர்" என்ற முழக்கங்களோடு பெரியார் கைத்தடிகளை ஏந்தி சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் எழுச்சி மிகு ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானார்கள். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். திருவல்லிக்கேணி 'அய்ஸ் அவுஸ்' பகுதியில் ஆக.31, பிற்பகல் 4 மணியளவில் விநாயகன் சிலை ஊர்வலம் நடந்த அதே நாளில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தோழர்கள் கைது செய்யப்பட்டு இரவு 9 மணி வரை திருவல்லிக்கேணி சமூக நலக் கூடத்தில் வைக்கப்பட்டனர். 110 தோழர்கள் கைதானார்கள். விழுப்புரம் மாவட்ட கழகத் தோழர்கள், புதுவையிலிருந்து பெரியார் சிந்தனை முன்னணியைச் சார்ந்த தீனா உள்ளிட்ட தோழர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத் தோழர் பார்த்திபன், ஜாதி ஒழிப்பு முன்னணி ஜெயநேசன், தமிழக மக்கள் முன்னணி அரங்க. குணசேகரன் காஞ்சி மாவட்டத்திலிருந்து ரவி பாரதி, கழகப் பொறுப்பாளர்கள் உமாபதி, வேழ வந்தன், அய்யனார், தபசி குமரன், வழக்கறிஞர் அருண், அன்பு தனசேகர், ஏசு குமார் உள்ளிட்ட தோழர்கள் பலரும் பங்கேற்றனர்.




# தமிழ்நாடே கொதிக்கிறது!





சென்னை பா.ஜ.க. அலுவலகம் முற்றுகை



சேலம்



ஈரோடு



திருப்பூர்



சென்னை

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th September 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN